ரூ.15 கோடி மதிப்பிலான 11 கிலோ தங்கம் பறிமுதல்

மதுரை மாநகரக் காவல் ஆணையர் தகவல்



மதுரை எஸ்.எஸ். காலனி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நகைகளை பார்வையிட்ட மாநகரக் காவல் ஆணையர் எஸ். ராஜேந்திரன். உடன் துணை ஆணையர் இனிகோ திவ்யன், உதவி ஆணையர் அசோகன் உள்ளிட்டோர்.

மதுரை, நவ. 17: மதுரை தனிஷ்க் நகைக் கடை கொள்ளை வழக்கில் ரூ. 15 கோடி மதிப்பிலான 11.384 கிலோ தங்கம், வைர நகைகள் மீட்கப்பட்டதாக மாநகரக் காவல் ஆணையர் எஸ். ராஜேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து மதுரை எஸ்.எஸ். காலனி காவல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது:

மதுரை திலகர் திடல் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட தனிஷ்க் நகைக் கடையில் கடந்த வியாழக்கிழமை கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் நடைபெற்ற பகுதி மட்டுமன்றி, நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்த 100-க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமரா பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டன.

தீவிர தேடுதலின் காரணமாக, வழக்கில் முக்கிய எதிரியான நிஷாந்த், அவரது தந்தை சுரேஷ், தோழி மீனாட்சி ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டனர். தொடர் விசாரணையில், கொள்ளை போன ரூ. 15 கோடி மதிப்பிலான 11.384 கிலோ தங்கம், வைர நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

நகைக் கடையில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்ததைப் பயன்படுத்தி நிஷாந்த் நகைகளை கொள்ளையடித்துச் சென்றார். எச்சரிக்கை தானியங்கி மணி (அலாரம்) இருந்தும் அது செயல்பாட்டில் இல்லை. இதனால், பாதுகாப்புக் குறைபாடு ஏற்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு கடைகளின் உள்ளே மட்டுமன்றி, வெளியிலும் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும்.

நிஷாந்த் முன்கூட்டியே திட்டமிட்டதற்கு கடையில் இருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகள் உள்ளன. சிசிடிவி கேமரா ஒன்றை மறைப்பதற்கும் அவர் முயற்சித்தார். மேலும், கொள்ளையடித்த நகைகளில் ஒரு பகுதியை தனது தந்தையிடம் கொடுத்தார். அவற்றை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்ததாக அவரது தந்தையும் வாக்குமூலம் அளித்தார். கொள்ளை குறித்து தந்தைக்கு எப்போது தெரியவந்தது, நகைகளை மறைப்பதில் அவரது பங்கு என்ன என்பது குறித்து விசாரிக்கப்படும்.

இதேபோல, நிஷாந்தின் தோழி மீனாட்சிக்கு இந்தக் கொள்ளை குறித்து முன்கூட்டியே தெரிந்திருந்தும் காவல் துறைக்கு தெரிவிக்கவில்லை. கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் எங்கிருக்கின்றன என்பது குறித்தும் அவருக்கு ஓரளவு தெரிந்திருந்தது.

கைப்பேசி உரையாடல்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி நகைகள் மீட்கப்பட்டன. இதுவரை நடைபெற்ற விசாரணையில், இந்தக் கொள்ளையில் நிஷாந்த் மட்டுமே நேரடியாக ஈடுபட்டது தெரியவந்தது.

இருப்பினும், நகைக் கடை ஊழியர்கள் அல்லது வேறு யாருக்காவது தொடர்பு உள்ளதா என்பது குறித்து தொடர் விசாரணையில் தான் தெரியவரும். நிஷாந்த் உள்ளிட்ட 3 பேரையும் போலீஸ் காவலில் எடுத்து விசாரித்த பிறகே முழுமையான விவரங்கள் தெரியவரும்.

கொள்ளைக்குப் பயன்படுத்திய பொருள்கள் இதுவரை முழுமையாக மீட்கப்படவில்லை. கொள்ளைக்குப் பிறகு, பெங்களூரு, சேலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அவர் சென்றதற்கான காரணம், யாரிடமாவது உதவி கேட்டாரா என்பதும் விசாரணைக்கு உள்ளடுத்தப்படும்.

இந்த வழக்கில் விரைந்து செயல்பட்டு, எதிரிகளைக் கைது செய்த தனிப்படை போலீஸாரை பாராட்டுகிறேன் என்றார் அவர்.

கனிமவளங்கள் கொண்டு செல்ல தடை ரத்து

'தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்'

சென்னை, நவ. 17: தமிழகத்திலிருந்து வெளிமாநிலங்களுக்கு கனிமங்களைக் கொண்டுசெல்ல தமிழக அரசு விதித்திருந்த மூன்று மாத தடை சட்டவிரோதம் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்த உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு மேல் முறையீடு செய்ய வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

இதுதொடர்பாக பசுமைத் தாயகம் அமைப்பைச் சேர்ந்த மு.வெற்றிச்செல்வன் கூறியதாவது:

கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கருங்கல், ஜல்லிக்கற்கள், 'எம்-சாண்ட்' போன்ற கனிமங்களின் தடையற்ற விநியோகத்தை உறுதிசெய்யும் வகையில், தமிழ்நாடு சட்ட விரோத கனிமச் சுரங்கம், கனிமப் போக்குவரத்து மற்றும் சேமிப்பு, தடுப்பு விதிகளில் கடந்த ஜூலை மாதம் திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி, புதுச்சேரி தவிர்த்து பிற மாநிலங்களுக்கு கனிமங்களை ஏற்றுமதி செய்ய மூன்று மாதங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையை நீக்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறபித்திருப்பது தமிழகத்துக்கு ஆபத்தை விளைவிக்கும் செயலாகும்.

தமிழகத்துக்கு 'எம்-சாண்ட்', ஜல்லிக்கற்கள் போன்ற கட்டுமானப் பொருள்களின் தேவை அதிகளவில் உள்ளது. ஆனால், அதன் இருப்பு குறைவாகவே உள்ளது. இதை ஈடுசெய்யவே அந்தத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், தடையை நீக்கியதன் மூலம் மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், இது, கனிமங்கள் சட்டவிரோத ஏற்றுமதி, கொள்ளையையும் ஊக்குவிக்கும்.

எனவே, இந்தத் தடைக்கு எதிராக தமிழக அரசு உடனடியாக மேல்முறையீடு செய்ய வேண்டும். அதேபோல், தமிழகத்துக்கு ஜல்லிக்கற்கள், 'எம்-சாண்ட்' உள்ளிட்ட கனிமங்களின் தேவை எவ்வளவு என்பதைக் கணக்கீடு செய்ய வேண்டும். பின்னர், அதை இருப்பு வைத்துக்கொண்டு, மீதமிருப்பதை ஏற்றுமதி செய்யும் வகையில் சட்டதிருத்தம் கொண்டு வர வேண்டும் என்றார் அவர்.

இயற்கை ஆர்வலர்கள் கூறியதாவது: தமிழகத்தில் இருந்து அதிக அளவு எம் சாண்ட், பி சாண்ட் மற்றும் ஜல்லிக் கற்கள் கேரளத்துக்கு சட்டவிரோதமாகக் கடத்தப்படுகின்றன. குறிப்பாக, தமிழகத்தில் ஓராண்டு அனுமதிக்கப்படும் கனிமம் ஜனவரி மாதத்திலேயே வெட்டி எடுக்கப்படுகிறது.

மீதமுள்ள 11 மாதங்கள் வெட்டி எடுக்கப்படும் கனிமவளங்கள் அனைத்தும் சட்டவிரோதமானதாகும். இதற்கு மிக முக்கியக் காரணம் தமிழகத்தைவிட கேரளத்தில் உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் எம் சாண்ட், பி சாண்ட் மற்றும் ஜல்லிக் கற்கள் மூன்று மடங்கு விலைக்கு விற்கப்படுகிறது. இதனால், தமிழகத்தில் சட்ட விரோதமாக கணக்கில்லாமல் கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.

இதை வெறும் கனிமவளக் கொள்ளையாக மட்டும் பார்க்க முடியாது. இதனால், தமிழகத்தின் பல்லுயிர்ச்சூழல், நிலத்தடி நீர்மட்டம், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் கணக்கில்லாமல் எடுக்கப்பட்டதை ஓரளவுக்கு சரி செய்யும் வகையில் தமிழக அரசு வெளிமாநிலங்களுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்வதற்கான தடை உபயோகமாக இருந்தது. ஆனால், அந்தத் தடையை உயர்நீதிமன்றம் நீக்கி இருப்பது கனிமவளக் கொள்ளை மீண்டும் அதிகப்படுத்தும் விதமாக அமைந்துவிடும்.

தமிழக அரசின் தடை உத்தரவை வெறும் சட்டத்தின் அடிப்படையில் மட்டும் உயர்நீதிமன்றம் பார்க்கக் கூடாது. இயற்கைச் சூழலை மீட்டுருவாக்கம் செய்யும் நடவடிக்கையாக பார்க்க வேண்டும். உயர்நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக அரசு மேல்முறையீடு செய்வதுடன், இதுதொடர்பாக வலுவான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

என்னிடம் சொந்த கார் இல்லை: சு.வெங்கடேசன் எம்.பி.

மதுரை, நவ. 17: இதுவரை தனக்குச் சொந்தமாக கார் இல்லை என மதுரை மக்களவைத் தொகுதி உறுப்பினர் சு. வெங்கடேசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவு: பொதுவுடைமைவாதி என்பதில் அளவிலாப் பெருமை கொள்கிறேன். கேள்வி கேட்க எனக்கு கம்யூனிஸம் கற்றுத் தந்துள்ளது. இந்தப் பாடத்தை எந்த அவதூறும் அழித்திட முடியாது. ரயில் நிலையத்துக்கு வந்திறங்கிய கார் கொண்டு நான் விமர்சிக்கப்பட்டிருக்கிறேன். இது, மேலோட்டமான கணிப்பின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட விமர்சனம். நான் பயணித்த அந்த கார் என்னுடையதில்லை; எனக்கு இதுவரை சொந்தமாக கார் இல்லை.

என் ரயில் பயணம், மக்களவை உறுப்பினருக்கான பயண உரிமை சார்ந்தது. முதல் வகுப்பில் பயணிப்பதால் ஒருவரின் கருத்து தவறாகிவிடாது. இதேபோல, சாதாரண வகுப்பில் பயணிப்பதால் ஒருவர் சொல்வது அனைத்தும் சரி எனவும் ஆகிவிடாது.

அணியும் சட்டைக்காகவும், வந்திறங்கும் காருக்காகவும், பயணிக்கும் வகுப்புக்காகவும் (ரயிலில்) கேள்விக்கு உள்படுத்தப்படுகிறோம். இந்தக் கேள்வி 'தூய்மை, எளிமை' எனும் எங்களின் கோட்பாடு சார்ந்து முன்வைக்கும்போது அதற்கு பொறுப்போடு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படியொரு பெருமைமிகு கட்சியால்தான் நாங்கள் வளர்க்கப்பட்டிருக்கிறோம். பாவ புண்ணியத்துக்கும், பகுத்தறிவுக்குமான போராட்டத்தில் நாங்கள் நிற்கும் தரப்புக்காக பெருமையோடு என்றும் முன்நிற்போம் என்றார்.

விளக்கம்... நூலகங்களுக்கான புத்தகக் கொள்முதல் முறைகேடு குறித்த வழக்கின் விசாரணை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது, நீதிபதி எப்படி பணியாற்ற வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கும் மதுரை மக்களவைத் தொகுதி உறுப்பினர் சு. வெங்கடேசன், ஒரு பொதுவுடைமை இயக்கத்தில் இருந்து கொண்டு, ஆடம்பர வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவது ஆச்சரியமளிக்கிறது எனப் பொருள்படும் வகையில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில், சு. வெங்கடேசன் எம்.பி. இந்தப் பதிவை வெளியிட்டார்.

5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறாவிட்டால் பணியிலிருந்து விடுவிப்பு: கல்வித் துறை

சென்னை, நவ. 17: பள்ளிக் கல்வித் துறையில் சேர்ந்த இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் 5 ஆண்டுகளுக்குள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாவிட்டால் பணியிலிருந்து விடுவிக்க வேண்டும் என பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை:

தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையில் கருணை அடிப்படை, கீழ்நிலைப் பதவியிலிருந்து பணி மாறுதல், மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு ஈர்க்கப்பட்டவர்கள் உள்ளிட்ட பல்வேறு முறைகளில் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கான தகுதிகாண் பருவத்தை, தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் சட்ட விதியின்படி, துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்காக அதிக பட்சம் 5 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம். ஆனால், 5 ஆண்டுக்குள் கட்டாயம் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும்.

இல்லையெனில், பணியாளர்களின் தகுதிகாண் பருவத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, பணியிலிருந்து விடுவிக்க வேண்டும்.

அவர்களைப் பணியில் தொடர்ந்து அனுமதிக்க நியமன அலுவலர்களுக்கு அதிகாரம் கிடையாது என்று அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, 5 ஆண்டுகள் கடந்தும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாதவர்களின் தகுதிகாண் பருவத்தை முடிவுக்குக் கொண்டு வருவதுடன், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது என அதில் கூறப்பட்டுள்ளது.

பொது அறிவிப்பு

திருவஞ்சேரி மாவட்டம், முத்தம்மல் வட்டம், நூல்பல கிராமம், முத்தம்மல் நெடுஞ்சாலை, வாகரம், சென்னை - 600 095 இல் சர்வே எண். 101/2A1A (பழைய சர்வே எண். 71/1B, 73/1, 73/2 (பகுதி), 73/3 (பகுதி), 73/4, 73/5, 73/6 (பகுதி), 70/1, 70/2, 70/3, 70/4, 70/5, 70/6, 70/7, 71/9, 71/10, 71/11, 71/12, 72/7 & 72/8) இல அமைவுள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வளாகத்தின் கட்டுமானப் பணிக்கான சுற்றுச்சூழல் இசைவாணையை, மதில் சுற்றுசுவர் நாக மதிப்பீட்டு ஆணையம் வழங்கியுள்ளது. இசைவாணையின் நகல், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் கிடைக்கும். மேலும் இவ்வாணையை சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை அமைச்சகத்தின் இணையதளத்திலும் (https://parivesh.nic.in/newupgrade/#/trackYourProposal) காணலாம்.

இப்படிக்கு
எஸ்/எஸ். பிரிகேட் எண்டர்பிரைசஸ் லிமிடெட்.

மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் - II, சென்னை முன்பாக
O.A. No. 310 of 2026

M/s. ஆக்சிஸ் வங்கி லிமிடெட்.
எழும்பூர் கிளை,
புதிய எண். 7A,
(பழைய எண் 2 முதல் 4 வரை),
ஹாலஸ் சாலை, எழும்பூர்,
சென்னை-600 008.
... மனுதாரர்

எதிர்

லலிதி நிதுரி
D/o. TD நிதுரி
... பிரதிவாதி

பெறுநர்,
பிரதிவாதி: லலிதி நிதுரி
D/o. TD நிதுரி
எண். 9/54, 4-வது தெரு, அரும்பாக்கம்,
அசோக் நகர், சென்னை-600 088.

மாற்று சேவை மூலம் பிரதிவாதிக்கு சம்மன்

வாதி வங்கி கடன் திரும்பப் பெறுவதற்கு உங்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளது மாண்புமிக்க கடன் மீட்பு தீர்ப்பாயம் - II சென்னை உங்களுக்கு மாற்று சேவை முறையில் 11.01.2027 அன்று வழங்க தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

பதிவாளர் கடன் மீட்பு தீர்ப்பாயம் - II சென்னை முன்னிலையில் 11.01.2027 காலை 11.30 மணியளவில் உங்கள் வழக்கு விசாரணைக்கு வருகிறது என்பதை கவனத்தில் கொள்ளவும் நீங்கள் ஆஜராகாவி இருக்கும் பட்சத்தில் நீங்கள் இல்லாத நிலையில் உங்கள் மீதான வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

K.V.P. தீபக்ராஜ்
மனுதாரர் சார்பு வழக்கறிஞர்

PUBLIC NOTICE

Please take notice that **Mrs. A. DEVI**, Daughter of Mr. S. Asokan, residing at No.25, 4th Street, AJ Block, Shanthi Colony, Anna Nagar, Chennai – 600 040, is the sole and absolute owner of all that piece and parcel of vacant land situated at Melakuppam Village, Thirukazhukundram Taluk, Chengalpattu District, comprised in Survey Nos.31/1, 31/2, 31/3, 32/3, 33/4A2 and 33/4B2, measuring an aggregate extent of approximately 30.61 Acres (hereinafter referred to as the "Owner's Property").

It is further informed that **M/s. ASHOK NANDAVANAM PROPERTIES PRIVATE LIMITED,** a Private Limited Company incorporated under the provisions of the Companies Act, 1956, having its office at No.1/460, Mount Poonamallee Road, Ayyapanthangal, Chennai – 600 056 (hereinafter referred to as the "Developer"), is undertaking the development and marketing of the aforesaid Owner's Property, together with another extent of land measuring approximately 1.00 Acre comprised in Survey No.31/4, belonging to **Mr.R.RAJAGOPAL,** by forming a residential layout in the aggregate extent of approximately 31.61 Acres.

M/s. SUNDARAM HOME FINANCE LIMITED, a company incorporated under the provisions of the Companies Act, 1956, having its registered office at No.21, Patullos Road, Chennai – 600 002, has proposed to extend a Term Loan to the aforesaid **Mrs. A. DEVI and M/s. ASHOK NANDAVANAM PROPERTIES PRIVATE LIMITED** (hereinafter collectively referred to as the "Borrowers").

In connection with the aforesaid proposed Term Loan, the Owner and/or the Developer have proposed to offer the Owner's Property, more fully described hereinabove, as security in favour of M/s. Sundaram Home Finance Limited by way of mortgage and/or deposit of title deeds, as applicable, for securing the due repayment of the proposed Term Loan, together with interest, costs, charges and all other monies payable there under.

Therefore we inform the General Public, bank, financial institution, company, firm, individual or other entity having or claiming any right, title, interest, share, claim, demand or encumbrance of whatsoever nature over or in respect of the aforesaid property or any portion thereof, including any claim arising out of ownership, co-ownership, inheritance, succession, mortgage, charge, lien, deposit of title deeds, agreement of sale, sale deed, allotment, lease, tenancy, development agreement, joint development agreement, power of attorney, construction agreement, attachment, court order, decree, acquisition proceedings or otherwise, if any, called upon to intimate the same in writing, together with supporting documentary evidence, to the undersigned Advocate **within 10 (Ten) days from the date of publication of this notice.**

Any such claims or objections shall be submitted to the undersigned Advocate at the address mentioned below, either by Registered Post with Acknowledgement Due or by hand delivery, together with copies of the relevant supporting documents, within the stipulated period.

In the event of no such claim or objection being received within the aforesaid period of 10 (Ten) days, our client shall proceed with the proposed Term Loan transaction on the basis of the documents and representations furnished by the Borrowers, without any further reference to such persons, and no further claim will be entertained thereafter.

P.E.R.NAMBIAR, Advocate,
For M/s.Nambiar Associates,
5/9, Taylors Estate First Street,
Kodambakkam, Chennai-600024
Mobile No. 9444168323

தூத்துக்குடி மாநகராட்சி

மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)

கோப்பு எண்: E3/2769/2026 நாள்: 16.11.2026

தூத்துக்குடி மாநகராட்சியில் பொது நிதி 2026-2027 கீழ் 1) Laying and fixing of Pipeline and Motor for construction of Plant Room and Balancing tank for pool circulation purpose at Peral Beach in East Zone & 2) Construction of Plant room, balancing tank for pool circulation purpose at Pearl beach Swimming pool in East Zone பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி ஆணையாளர் அவர்களால் வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி படிவம் விபரம்	:	https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி குறித்து முழு விபரங்கள் பெறலாம்.
ஒப்பந்தப்புள்ளி படிவம் இறக்கம் செய்தல்	:	19.11.2026 காலை 10.00 மணி முதல் 07.12.2026 மாலை 3.00 மணி வரை
ஒப்பந்த மதிப்பு	:	1) ரூ. 99.95 இலட்சம் 2) ரூ.50.00 இலட்சம்
முன் வைப்புத்தொகை (EMD) இணையதளத்தின் வாயிலாக மட்டும் செலுத்தப்பட வேண்டும்)	:	1) ரூ. 99,950/— 2) ரூ.50,000/—
ஒப்பந்தப்புள்ளிஇணையதளத்தின்வாயிலாக சமர்ப்பிக்க வேண்டிய நாள்மற்றும் நேரம்:	:	19.11.2026 காலை 10.00 மணி முதல் 07.12.2026 மாலை 3.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளிக்கு முன் வைத்தாய்வு கூட்டம்	:	24.11.2026 11.00 மணி தூத்துக்குடி மாநகராட்சி ஸைய அலுவலகம்
ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தில் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் மற்றும் நேரம்	:	07.12.2026 மாலை 3.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தின் வாயிலாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	:	07.12.2026 மாலை 3.30 மணி தூத்துக்குடி மாநகராட்சி ஸைய அலுவலகம்

செ.ம.தொ.இ./3630/ஒப்பந்தப்புள்ளி/2026
ஆணையாளர்
தூத்துக்குடி மாநகராட்சி

GOVERNMENT OF TAMIL NADU
TAMILNADU PUBLIC WORKS DEPARTMENT
OFFICE OF THE SUPERINTENDING ENGINEER, PWD
BUILDINGS (CONSTRUCTION & MAINTENANCE) CIRCLE 2, CHEPAUK, CHENNAI - 600 005.

e-Tender Notice No. 11 BCM/2026-2027/dated:16.11.2026.
NOTICE FOR PRE-QUALIFICATION FOR THE SELECTION OF ARCHITECT / ARCHITECTURAL FIRMS
REQUEST FOR PROPOSAL(RFP)
FOR
ENGAGEMENT OF CONSULTANCY FIRM FOR SPECIALIZED ARCHITECTURAL, ENGINEERING AND PROJECT MANAGEMENT CONSULTANCY FOR ESTABLISHMENT OF AN INTERNATIONAL STANDARD HIGH - RISE MULTI SPORTS CENTRE AT JAWAHARLAL NEHRU INDOOR STADIUM COMPLEX, CHENNAI

1. For and on behalf of the Governor of Tamil Nadu, the Superintending Engineer, PWD., Buildings (Construction & Maintenance) Circle 2, Chennai invites e-tenders from the leading Architect / Architectural Firms / consortium registered in the Council of Architecture in India / Equivalent to provide comprehensive Architectural Consultancy Services and PMC services towards Master planning for a total land area of about 1.5 Acres and detailed architectural and Structural design for establishment of an International Standard high - rise Multi Sports Centre at Jawaharlal Nehru Indoor Stadium Complex, Chennai. EMD Amount: Rs.2,00,000/-(through online only).
The last date for receipt of e-tender through online is upto **15.00 hours on 21.12.2026.**
For further details visit **https://tntenders.gov.in:**

Superintending Engineer, PWD.,
Buildings (Construction & Maintenance) Circle-2
Chepauk, Chennai – 600 005

DIPR/3612/Tender/2026

தமிழ்நாடு வனத்துறை
முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி

இணையவழி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். ந.க.எண். 3340/2026

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக, முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி கோட்டத்திற்கு 01.12.2026 முதல் 31.03.2027 வரை அவுட் சோர்சிங் முறையில் வனிதமான சேவைகளை வழங்குவதற்காக தகுதிபுள்ள நிறுவனங்கள்/ நிறுவன அமைப்புகள்/ முகமைகளிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-Tenders) வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	டேவணி தொகை	ஒப்பந்தப்புள்ளி விலை
	முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி கோட்டத்திற்கு அவுட்சோர்சிங் முறையில் தனியான சேவைகளை வழங்குவதற்கான முகமையை நியமித்தல்.	ரூ.1,50,00,000	ரூ.1,50,000	01.12.2026 முதல் 31.03.2027

1 ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் நிபந்தனைகளைப் பெறுவதற்கான இணையதளம் : https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிவு செய்யவும்.
2 ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத்தொகை பதிவேற்கம் செய்யத் தொடங்கும் நாள் : 14.11.2026 காலை 10.00 மணி
3 எழுத்திற்கு முற்பகல் கூட்டம் : 25.11.2026 காலை 11.30 மணி
4 ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் : 29.11.2026 மாலை 5.00 மணி
5 தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 30.11.2026 காலை 11.30 மணி
6 நிதி ஒப்பந்தப்புள்ளி (Financial Bid) : பின்னர் அறிவிக்கப்படும்.

மேற்கண்ட தேதிகள் மற்றும் நேரங்களில், https://tntenders.gov.in என்ற இணையவழி ஒப்பந்தப்புள்ளி தளத்தின் மூலம் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட்டு, மதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் அலுவலகத்தில் திறக்கப்பட்டும். இது தொடர்பான கூடுதல் விபரங்கள் மற்றும் நகலங்களை அலுவலக வேலை நாட்களில் கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./3608/ஒப்பந்தப்புள்ளி/2026
துணை இயக்குநர்,
முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி.

தமிழ் நாடு அரசு
பொதுப்பணித்துறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 19/2026- 2027/க(கூ&ப)-1/சென்னை/ நாள்: 17.11.2026
ஒப்பந்தம்- C-FORM/ Item Rate (இணையதள வழியில் மட்டும்)

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்பு பொறியாளர், பொதுப்பணித்துறை கட்ட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து தர மதிப்பீடு குறியீடு பெற்றவர்களிடமிருந்து மட்டும் பெறுவதற்கு கோரப்படுகிறது.

வ. எண்	பணியின் பெயர்	பணியின் தோராயமதிப்பு மதிப்பீடு	முன்வைப்பு தொகை, ஆவணம் விற்பனை மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம்	தகுதி மற்றும் பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள்
1	2	3	4	5
		ஒரு உறை முறை		
1.	சென்னை-5, தலைமைச் செயலகம், தாய்கோ வளாகத்தில் உள்ள வாய்மொழி வாதாடு அறை (Video Conference Room) மற்றும் பேரவைத் தலைவர் அலுவலகம் (Public Address System), பல்வேறு தளங்களில் LAN மற்றும் EPABX வசதிகளை செய்தல் பணி	ரூ.246.25 இலட்சங்கள்	ரூ.1,34,000/- 1 (ஒரு) மாதம்	பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு -3 (அல்லது வகுப்பில்லாத) (வகுப்பு - 3 நிகழ்நிலை வகுப்பில்லாத) with ESB License holders / Empanelled Radio Firms/ Contractors in PWD/ Reputed Firms (Having previous experience in similar nature of work)

குறிப்பு: 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த நகலை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை பிரிவினரத்தின் முழு நேரவை மதிப்பீட்டில் பெறலாம். http://tntenders.gov.in.
2. இணையவழி வாயிலாக இறக்கப்பட்டவர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளியை கட்டாயம் நகலாக பெறப்படுவதை கட்டாயம் தவிர்க்கவும். தேதி: 18.12.2026 மாலை 3.00 மணி வரை
3. தெரிவுப் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளாக, தேதி: 18.12.2026 மாலை 4.00 மணி
4. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி மேலும் விவரங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in. இணையதளத்தில் பார்க்க தெரிவிக்கப்படும்.

செ.தொ.இ/3627/ஒப்பந்தப்புள்ளி/2026
கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து.,
கட்ட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5

தமிழ்நாடு அரசு
பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை
ந.க.எண்.475/2026/அ2 2026–27– மூலதன மானிய நிதி திட்டம் (CGF Scheme) நாள்.17.11.2026

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்	வைப்புத் தொகை முன் வைப்புத் தொகை (ஆன்லை) 1 சதவீதம்	ஒப்பந்த தாரரின் தகுதி	வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்)
1	பொத்தனூர் பேரூராட்சி வார்டு எண்.8 வீரணம்பாளையம் ரோடு பகுதியில் சிறுபாலம் மற்றும் மழுதூரி வடிகால் அமைத்தல்	117.00	1,17,000	Class - I	6 மாதம்

பொத்தனூர் பேரூராட்சியில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 30.11.2026 பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30.11.2026 பிற்பகல் 03.30 மணிக்கு அ/மோது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவல